**சுருக்கம்**

உயர்கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/ அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் – அனைத்து மாணவர்களுக்கும் 2007–2008–ஆம் ஆண்டிலிருந்து இலவச பயணப் பேருந்து அட்டை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**உயர்கல்வித்(ஜி1)துறை**

அரசாணை (நிலை) எண். 238, நாள் 13.7.2007.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண் 135 போக்குவரத்துத் துறை, நாள் 25.4.2004
2. அரசு கடித எண்.8956/B12004-6 போக்குவரத்துத் துறை நாள் 28.5.2004.
3. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித எண்.19823/க்யூ /2007 நாள் 29.5.2007.
4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கடித எண்.16858/எச்3/2007 நாள் 17.5.2007.

---

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 1.6.2004 முதல் 1–ம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து பள்ளி மாணவ / மாணவியர்களுக்கும் அனைத்துக் கல்லூரி மாணவ மாணவியருக்கும் (தனியார் பள்ளிகள் / கல்லூரிகள் உட்பட) 50 சதவித சலுகை அளித்து, பயணப் பேருந்து அட்டை வழங்குவது தொடர்பான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேற்குறிப்பிட்ட ஆணைகள் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் பொருந்தும் என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2. சட்டப்பேரவையில் 2007–2008–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு அமைச்சர் (உயர் கல்வி) அவர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

3. மேற்கண்ட அறிவிப்பினையடுத்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு/ பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவச பயணப் பேருந்து அட்டை வழங்குவது தொடர்பாக, அரசுக்கு உரிய கருத்துருக்களை கல்லூரிக் கல்வி இயக்குநர் / தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அனுப்பியுள்ளனர்.

4. கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருக்களை அரசு கவனமுடன் ஆராய்ந்து 2007–2008 –ம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச பயண பேருந்து அட்டை வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இலவச பயணப் பேருந்து அட்டை வழங்குதல் தொடர்பாக ஏற்படும் செலவினை மாநில போக்குவரத்து கழகங்களுக்கு அரசே திரும்ப செலுத்தும், இதற்கான விதிமுறைகளை நிதி (BPE) மற்றும் போக்குவரத்துறைகளை தனியே கலந்தாலோசித்து பின்னர் கணக்கிடப்படும்.

....2

6. இவ்வாணை நிதித்துறையில் அ.சா.கு.எண்.408/SS/(KPR)/2007, நாள். 13.7.2007-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்
அரசு செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.
செயலாளர், போக்குவரத்து துறை, சென்னை-9.
மாநிலகணக்காயர், சென்னை-18/35
கருவூலக் கணக்கு அலுவலர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/9/23.
நிதித்துறை, சென்னை-9
முதுநிலை நேர்முக உதவியாளர், உயர் கல்வித்துறை அமைச்சர், சென்னை-9.
முதுநிலை நேர்முக உதவியாளர், போக்குவரத்து துறை அமைச்சர், சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்